பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
27 04 2024 6 45
சனிக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- மக்களவைக்கு இரண்டாம் கட்டமாக நேற்று நடைபெற்ற தேர்தலில் 60 புள்ளி ஒன்பது ஆறு சதவீத வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.
- மூன்றாவது கட்டமாக தேர்தல் நடைபெற உள்ள தொகுதிகளில் பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.
- சுதந்திர தின அருங்காட்சியகம் அமைப்பதற்கு சுதந்திர காலத்தில் பயன்படுத்தப்பட்ட பொருட்களை மக்கள் அளிக்கலாம் என்று மாநில அரசு கூறியுள்ளது.
- சமுதாய வளர்ச்சிக்கு சிறப்பாக சேவையாற்றும் இளைஞர்களின் பணியை அங்கீகரிக்கும் வகையில் அளிக்கப்படும் முதலமைச்சர் மாநில இளைஞர் விருதுக்கு விண்ணபங்கள் வரவேற்கப்படுவதாக மாநில அரசு அறிவித்துள்ளது.
- ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பஞ்சாப் அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் கொல்கத்தா அணியை வென்றது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<< >>>>

மக்களவைக்கு இரண்டாம் கட்டமாக நேற்று நடைபெற்ற தேர்தலில் 60 புள்ளி ஒன்பது ஆறு சதவீத வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

13 மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசத்தில் இடம்பெற்றுள்ள 88 தொகுதிகளில் வாக்குப்பதிவு அமைதியாக நடைபெற்று முடிந்ததாக கூறியுள்ளது.

கடும் வெப்பநிலைக்கு இடையே வாக்காளர்கள் ஆர்வத்துடன் வாக்களித்ததாக ஆணையம் தெரிவித்துள்ளது.

அதிகபட்சமாக திரிபுரா மாநிலத்தில் 78 புள்ளி 5 சதவீத வாக்குகளும், குறைந்தபட்சமாக உத்தரப்பிரதேசத்தில் 53 புள்ளி 7 சதவீத வாக்குகளும் பதிவாகி உள்ளன.

ராஜஸ்தான் மற்றும் சத்தீஸ்கரில் 73 சதவீதமும், அசாமில் 70 புள்ளி ஆறு எட்டு சதவீதமும், கேரளாவில் 70 புள்ளி இரண்டு இரண்டு சதவீதமும், கர்நாடகாவில் 64 புள்ளி ஐந்து ஐந்து சதவீதமும், மத்தியப்பிரதேசத்தில் 58 புள்ளி மூன்று மூன்று சதவீதமும், மகாராஷ்டிராவில் 53 புள்ளி 8 ஆறு சதவீத வாக்குகளும், ஜம்மு-கஷ்மீரில் 71 புள்ளி ஒன்பது ஒன்று சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு, கேரளா, ராஜஸ்தான், திரிபுரா, சிக்கிம், மணிப்பூர், மேகாலயா, நாகாலாந்து, மிசோரம், அருணாச்சலப்பிரதேசம், உத்தராகண்ட் மாநிலங்களிலும் புதுச்சேரி, லட்சத்தீவு மற்றும்... அந்தமான் நிகோபார் ஆகிய யூனியன்பிரதேசங்களில் மக்களவைத் தேர்தல் நிறைவடைந்துள்ளன.

இதற்கிடையே 5ஆம் கட்டமாக அடுத்த மாதம் 20ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ள 49 தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் நேற்று தொடங்கியது.

உத்தரப்பிரதேசத்தில் 14, மகாராஷ்டிராவில் 13, மேற்குவங்கத்தில் 7, ஒடிசா மற்றும் பீஹாரில் தலா 5, ஜார்கண்டில் 3 தொகுதிகளிலும், ஜம்மு-கஷ்மீர் மற்றும் லடாக்கில் தலா ஒரு தொகுதியிலும் 5ஆம் கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

இந்நிலையில் 4ஆம் கட்ட தேர்தலுக்கான வேட்புமனு மீதான பரிசீலனை நேற்று நடைபெற்றது.

வேட்புமனுவை திரும்பப்பெற நாளை மறுநாள் கடைசி நாளாகும்.

<<<< >>>>

மூன்றாவது கட்டமாக தேர்தல் நடைபெற உள்ள 94 தொகுதிகளில் பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

12 மாநிலங்களில் இத்தொகுதிகள் இடம்பெற்றுள்ளன.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, திரிணாமுல் காங்கிரஸ் தலைவரும், மேற்குவங்க முதலமைச்சருமான செல்வி மம்தா பானர்ஜி உள்ளிட்ட தலைவர்கள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அடுத்த மாதம் 7ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

<<<< >>>>

சுதந்திரப் போராட்டத்தில் தமிழகத்தின் தியாகத்தையும், பங்களிப்பையும் போற்றும் வகையில் சென்னை மெரினா கடற்கரை எதிரே அமைந்துள்ள ஹுமாயூன் மஹால் கட்டிடத்தில் சுதந்திர தின அருங்காட்சியகம் அமைக்கப்பட உள்ளது.

இதற்காக பொதுமக்கள் தங்களிடம் உள்ள சுதந்திரப் போராட்டம் குறித்த பழங்கால ஆவணங்கள், கையெழுத்துப் பிரதிகள், செய்தித்தாள்கள், சிறை வில்லைகள், ராட்டைகள், பட்டயங்கள், ஐ.என்.ஏ. சீருடைகள், அஞ்சல்தலைகள் மற்றும் ரூபாய் நோட்டுகளை நன்கொடையாக அளிக்கலாம் என்று மாநில அருங்காட்சியகங்கள் துறை அறிவித்துள்ளது.

இந்த அரிய பொருட்களை சென்னை அல்லது 23 மாவட்ட அருங்காட்சியகங்களுக்கு பொதுமக்கள் நேரடியாக சென்று வழங்கலாம் என்று கூறியுள்ளது.

அவ்வாறு வழங்கப்படும் பொருட்களுக்கு ஒப்புகை கடிதம், பாராட்டு சான்றிதழ் ஆகியவை அளிக்கப்படும் என்று தெரிவித்துள்ளது. அத்துடன் இந்த அரிய பொருட்கள் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும் போது, அதை வழங்கியவர்களின் பெயர்களும் இடம்பெறும் என்று மாநில அருங்காட்சியகங்கள் துறை வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<< >>>>

சமுதாய வளர்ச்சிக்கு சிறப்பாக சேவையாற்றும் இளைஞர்களின் பணியை அங்கீகரிக்கும் வகையில் அளிக்கப்படும் முதலமைச்சர் மாநில இளைஞர் விருதுக்கு விண்ணபங்கள் வரவேற்கப்படுவதாக மாநில அரசு அறிவித்துள்ளது.

15 வயது முதல் 35 வயதுடையவர்கள் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் இந்த ஆண்டு மார்ச் மாதம் வரை மேற்கொண்ட சேவைகளை குறிப்பிட்டு விண்ணப்பிக்கலாம் என்று தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் **www.sdat.tn.gov.in** என்ற இணையதளத்தின் மூலம் மே மாதம் ஒன்றாம் தேதி முதல் 15ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.

மத்திய, மாநில அரசுகள், பொதுத்துறை நிறுவனங்கள், பல்கலைக்கழங்கள், கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் பணியாற்றுவோர் இவ்விருதுக்கு விண்ணப்பிக்க இயலாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்வு செய்ப்படும் 3 ஆண்கள் மற்றும் 3 பெண்களுக்கு இந்த ஆண்டு சுதந்திர தின விழாவில் இவ்விருது வழங்கபட்ட உள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

<<<< >>>>

கஜகஸ்தான் தலைநகர் அஸ்தானாவில் நேற்று நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பாதுகாப்புத்துறை அமைச்சர்கள் கூட்டத்தில் பாதுகாப்புத்துறை செயலாளர் திரு. கிரிதர் அரமானே பங்கேற்றார்.

ஐ.நா. சபையில் சர்வதேச தீவிரவாதம் குறித்த மாநாடு நடத்தப்பட வேண்டும் என்ற இந்தியாவின் பரிந்துரையை அவர் நினைவுபடுத்தினார்.

இந்தோ – பசிபிக் பிராந்தியத்தில் அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி என்ற இந்தியாவின் கருத்தை அவர் சுட்டிக்காட்டினார்.

அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பை பராமரிப்பதில் இந்தியாவின் உறுதியான அர்ப்பணிப்பை பாதுகாப்புத்துறை செயலர் திரு. கிரிதர் அரமானே வலியுறுத்தினார்.

<<<< >>>>

12ஆம் வகுப்பிற்குப் பிந்தைய படிப்பு குறித்த உயர்கல்வி வழிகாட்டி நிகழ்ச்சி கரூரில் நடைபெற்றது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் கரூர் காந்தி கிராமம், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அரசுப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.

கல்விக்கடன் பெறுவது, உயர்கல்வி படிப்பை தேர்ந்தெடுப்பது போன்ற தகவல்கள் இந்நிகழ்ச்சியில் விளக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<< >>>>

நாமக்கல் மாவட்டத்தில் கோழி, வாத்து மற்றும் காடை இறைச்சி கடைகளில் நன்கு சமைத்த இறைச்சிகளை விற்பனை செய்ய வேண்டும் என்றும், நோயுற்றது போன்ற அறிகுறிகள் உள்ளவற்றை இறைச்சிக்காக பயன்படுத்தக்கூடாது என்று மாவட்ட ஆட்சியர் திருமதி உமா அறிவுறுத்தியுள்ளார்.

இறைச்சி கடைகளில் பணிபுரியும் பணியாளர்கள் மருத்துவ சான்று பெற்றிருக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

பொதுமக்கள் உணவுப்பொருட்கள் சம்பந்தமான புகார்களை

9 4 4 4 0 4 2 3 2 2 என்ற வாட்சப் எண்ணிலும், **Food Safety Consumer** செயலி வாயிலாகவும் அளிக்கலாம் என்று நாமக்கல் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

<<<< >>>>

பராமரிப்பு பணிகள் காரணமாக விழுப்புரத்தில் இருந்து மாலை மணி 5.30க்கு திருப்பதிக்கு இயக்கப்படும் ரயில் சேவை இன்று முதல் அடுத்த மாதம் 4ஆம் தேதி வரை ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரியில் இருந்து மாலை 3 மணிக்கு திருப்பதிக்கு இயக்கபட்டும் ரயில் சேவை, திருச்சானூர் - திருப்பதி இடையே இன்று முதல் அடுத்த மாதம் 4ஆம் தேதி வரை ரத்து செய்யப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும் திருப்பதி – காட்பாடி இடையேயான ரயில் சேவை நாளை முதல் அடுத்த மாதம் 5ஆம் தேதி வரை ரத்து செய்யப்படுவதாகவும் தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டள்ளது.

<<<< >>>>

*இருவரிச் செய்திகள்*

பெரு நிறுவனங்கள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<< >>>>

ஜம்மு-கஷ்மீர் பாரமுல்லா மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் தீவிரவாதிகள் 2 பேர் கொல்லப்பட்டனர்.

<<<< >>>>

திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் அருகே கோவில் திருவிழாவில் எருது விடும் விழா நடைபெற்றது.

<<<< >>>>

திருச்சி அருகே நேரிட்ட சாலை விபத்தில் காரில் பயணம் செய்த சென்னையைச் சேர்ந்த 2 பேர் உயிரிழந்தனர். 2 பேர் காயமடைந்தனர்.

<<<< >>>>

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் கடற்கரையில் தடை செய்யப்பட்ட தலைவால் சங்கை விற்பனைக்கு வைத்திருந்த 2 பேரை வனத்துறையினர் கைது செய்தனர்.

<<<< >>>>

சென்னை விமான நிலைய கழிவறை மற்றும் குப்பைத் தொட்டிக்குள் மறைத்து வைத்திருந்த 90 லட்சம் ரூபாய் மதிப்பிலான தங்கக் கட்டிகளை தூய்மைப் பணியாளர்கள் கண்டெடுத்து சுங்கத் துறையினரிடம் ஒப்படைத்தனர்.

<<<< >>>>

தீ விபத்தின்போது நோயாளிகளை மீட்பது குறித்த ஒத்திகை நிகழ்ச்சி தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்றது.

<<<< >>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பஞ்சாப் அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் கொல்கத்தா அணியை வென்றது.

கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற போட்டியில் முதலில் பேட் செய்த கொல்கத்தா அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 261 ரன் எடுத்தது.

சால்ட் 75 ரன்னும், சுனில் நரைன் 71 ரன்னும் எடுத்தனர்.

262 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய பஞ்சாப் அணி 18 புள்ளி 4 ஓவரில் 2 விக்கெட்டை இழந்து இலக்கை எட்டியது.

அந்த அணியின் பேர்ஸ்டோ 48 பந்துகளில் 108 ரன்னுடனும் சஷாங்க் சிங் 28 பந்துகளில் 68 ரன்னும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பிரப் சிம்ரன்சிங் 20 பந்துகளில் 54 ரன் எடுத்தார்.

இந்த வெற்றியின் மூலம் 20-20 போட்டி வரலாற்றில் அதிகபட்ச ரன் இலக்கை சேஸ் செய்த அணி என்ற பெருமையை பஞ்சாப் அணி பெற்றது.

அத்துடன் நேற்றைய ஆட்டத்தில் அதிகபட்சமாக 42 சிக்சர்கள் அடிக்கப்பட்டதும் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி போட்டியில் ஒரு சாதனையாகும்.

தில்லியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் தில்லி அணி – மும்பை அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி மாலை மணி 3.30க்கு தொடங்குகிறது.

லக்னோவில் இரவு மணி 7.30க்கும் தொடங்கும் மற்றொரு போட்டியில் லக்னோ அணி – ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

<<<< >>>>